**Kalanjiiyam - International Journal of Tamil Studies**
Volume: 5 Special Issue December 2024 eISSN: **2456-5148**

களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

‘

# Thirugnanasambandar's pilgrimage in the Saiva tradition: A perspective

Mr.S.Ramanarajah,

Senior Lecturer, Department of Hindu Civilization, Faculty of Hindu Studies, University of Jaffna, Srilanka.
sramanaa@univ.jfn.ac.lk

Abstract:

This study is conducted to examine the impact of Thirugnanasambandar's pilgrimage on the Saiva tradition. The sources for this study are Thirugnanasambandar's thevarams, which are included in the first three of the twelve Thirumurais. The Pallava period is distinguished as a turning point in the social transformation and religious development of Saivaism. The Bhakti movement that emerged during this period had to present new plans and activities for Saiva culture and social development. Due to this, the movement used various strategies. One of them was their pilgrimages centered around temples. Such journeys became pilgrimages. Sambandar undertook pilgrimages as a planned propaganda strategy based on the reality that every profession and action has its goals. As a result of the intelligent implementation of such pilgrimages, it was possible to spread the ideas of Saivism among the self-reliant communities. These activities had a great impact on the society of that time. Therefore, the aim of this study is to identify the importance of Sambandar's pilgrimage in the Saivism tradition and the impact it had on the society.

Keywords: Sambandar, Pallava society, Saivism, pilgrimage, pathikam

# சைவப்பண்பாட்டு மரபில் திருஞானசம்பந்தரின் தலயாத்திரை: ஓர் நோக்கு

**Mr.S.Ramanarajah,**

***Senior Lecturer, Department of Hindu Civilization, Faculty of Hindu Studies, University of Jaffna, Srilanka.***

sramanaa@univ.jfn.ac.lk

***ஆய்வுச்சுருக்கம்:***

*திருஞானசம்பந்தர் மேற்கொண்ட தலயாத்திரை சைவப்பண்பாட்டு மரபில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியது என்பது பற்றியதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாக இடம்பெற்றிருக்கும் திருஞானசம்பந்தரின் தேவாரங்களே இந்த ஆய்வுக்கான மூலங்களாகும். சைவசமயத்தின் சமூக மாற்றத்திற்கும் சமய வளர்ச்சிக்குமான திருப்பு முனைக் காலமாக பல்லவர் காலம் சிறப்புப் பெறுகின்றது. இக்காலத்தில் தோன்றிய பக்தி இயக்கத்தினர் சைவப்பண்பாட்டுக்கும் சமூக அபிவிருத்திக்கும் புதிய திட்டங்களையும் செயற்பாடுகளையும் முன்வைக்க வேண்டிய சூழல் உருவாகியிருந்தன. இதன் காரணமாகப் பல்வேறு உத்திகளை இந்த இயக்கம் கையாண்டது. அவற்றில் ஒன்று திருக்கோயில்களை மையமாகக் கொண்ட அவர்களின்*

*புனிதப்பயணங்கள் ஆகும். இத்தகைய பயணங்கள் தலயாத்திரைகளாக அமைந்தன. ஒவ்வொரு தொழிலுக்கும் செயலுக்கும் குறிக்கோள்கள் உள்ளன எனும் யதார்த்த அடிப்படையில் சம்பந்தர் தலயாத்திரைகளை திட்டமிட்ட பிரசார உத்தியாக மேற்கொண்டார். இத்தகைய புனித யாத்திரைகளை புத்திசாலித்தனமாகச் செயல்;படுத்தியதன் விளைவாக தன்சார்புச் சமூகங்களிடையே சைவசமயக் கருத்துக்களைப் பரப்ப முடிந்தது. இச்செயல்கள் அக்காலச் சமூகத்தில் பெருந்தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன. எனவே, சைவப்பண்பாட்டு மரபில் சம்பந்தர் மேற்கொண்ட தலயாத்திரையின் முக்கியத்தவத்துவம் மற்றும் சமூகத்தில் அது ஏற்படுத்திய தாக்கங்களை இனங்காண்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.*

*திறவுச்சொற்கள்: சம்பந்தர், பல்லவர் காலச் சமூகம், சைவப்பண்பாடு, தலயாத்திரை, பதிகம்*
.

## அறிமுகம்

தொன்மைச் சிறப்புடைய சைவ சமயமானது பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு கருத்தியல்க;டாக பரிணமித்துள்ளது. தென்னிந்திய வரலாற்றில் பல்லவர் காலம் சைவத்தின் மறுமலர்ச்சியிலும் அதன் வளர்ச்சியிலும் திருப்புமுனையாக அமைந்தது. இக்காலத்தில் பக்தி இயக்கத்தின் தோற்றமும் அதன் செயற்பாட்டு இயங்கியலும் சைவத்தை வேறு திசையில் கொண்டு சென்றது. இதனாலேயே தமிழகம் மனித மையச் சூழலிலிருந்து சமயம் சார்ந்த சூழலுக்கு இக்காலகட்டத்தில் மாறத் தொடங்கியதாக சமய அறிஞர்கள் கருதுகின்றனர்.

பல்லவர் காலத்தில் அரசியல் மற்றும் புறச்சமயச் சூழல் சைவத்தையும் தமிழையும் முற்றாகப் பாதித்திருந்தது. இதனடிப் படையில் ‘சமூகத்திலும் சமயத்திலும் மாற்றங்கள் தேவை’ என்ற தன்னுணர்ச்சியின் வெளிப்பாடாக பக்தி இயக்கம் உருவானது. இத்தகைய சூழலில் பக்தி இயக்கத்தின் பின்னணியில் புறச்சமயச் சூழலை சைவச் சூழலாக மாற்றியமைத்ததால் சைவ வரலாற்றில் சம்பந்தர் முதன்மைப் படுத்தப்படுகின்றார். இதனால், சம்பந்தரைச் சேக்கிழார், ‘மிகு சைவத்துறை விளங்கச்’ (பெரியபுராணம்:1904) செய்ய வந்தவரென்று அறிமுகப்படுத்துகிறார். சிவனடியை நினைக்கும் திருப்பெருகு சிவ ஞானம் ஞானப்பால் உண்டதனால் கிடைத்தது என்றும் சேக்கிழார் சுட்டிக் காட்டியுள்ளார். இத்தகைய கருத்தியல் வெளிப்பாடுகள் சைவ இயக்கத்தில் சம்பந்தரின் செயற்பாடுகளைப் புரிந்துகொள்ள உதவு கின்றன.

## ஆய்வின் நோக்கமும் முறையியலும்

சமூக மாற்றத்தின் செயற்பாட்டிற்கு தன்னை அர்பணித்துக் கொள்ளும் ஒரு தலைவன் பல உத்திகள் மூலம் சுதந்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வார். சைவப் பண்பாட்டில் கடவுள் நம்பிக்கை மற்றும் அதனுடன தொடர்புடைய வழிபாட்டு முறைகள் தொன்மைக் காலத்திலிருந்தே பின்னிப்



KALANJIYAM

பிணைந்துள்ளன. வழிபடுபவர்களின் எண்ணம் மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப வழிபாட்டு முறைகள் மாறுபடுகின்றன மற்றும் விரிவடைகின்றன. இவ்வழிபாட்டு முறைகளில் திருத்தலங் களுக்கான பயணங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இத்தகைய பயணங்கள் யாத்திரைகளாக - வழிபாட்டு முறைகளாகக் காணப்படினும் அவை சமயப்பிரசார நடவடிக்கைகளுக்கான உத்திகளாக வும் அமைந்தன. சைவத்தின் பண்பாட்டுச் சிதைப்புகள் புறச்சமயவாதி களால் திட்டமிட்டு நடத்தப்பட்ட வேளையில், பண்பாட்டின் இருப்பினை நிலைநிறுத்தவும் வளர்க்கவும் ஒரு முறையான சமய நிறுவனத்தினை மையமாகக் கொண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால், சம்பந்தர் உள்ளிட்ட பக்தியியக்க ஆர்வலர்கள் திருக்கோயில்களை சைவத்தின் முக்கியமான நிறுவனங்களாக அடையாளம் கண்டு மக்களை அவற்றை நோக்கி ஈர்க்கும் வகையில் தங்கள் செயல்பாடுகளை விரிவுபடுத்தினார். இதன் அடிப்படையில் சைவசமய வரலாற்றில் சம்பந்தரின் யாத்திரையின் முக்கியத்துவத்தையும் அதன் சமூகத் தாக்கங்களையும் ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

இந்த ஆய்வு இலக்கிய விளக்க ஆய்வு மற்றும் வரலாற்று ஆய்வு ஆகிய இரண்டு பிரதான ஆராய்ச்சி முறையியல்களின் ஊடாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. திருஞான சம்பந்தரின் தேவாரங்;கள், பெரியபுராணம் மற்றும் அவற்றின் உரைவிளக்கங்களை முதன்மை மூலங்களாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு சம்பந்தர் மேற்கொண்ட யாத்திரை தொடர்பான விடயங்கள் மற்றும் சமூகத்தில் அவற்றின் தாக்கம் என்பன ஆராயப்படுகின்றன. எனவே இந்த ஆய்வு, உள்ளடக்கப்பகுப்பாய்வு அணுகு முறையையும் பின்பற்றுகிறது.

### ஆய்வினை நியாயித்தல்

பக்தியியக்கத் தலைமையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் பொதுவாக சமயப் பின்னணியில் இருந்து ஆன்மிக நோக்கு நிலையுடன் அணுகப்படுகிறார்கள். பல்லவர் கால சமுதாய வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கான வரலாற்றுச் சான்றுகளில் நாயன்மார்களின் இலக்கியங்களையும் சமூகப்பண்பாட்டு நோக்கில் அணுகவேண்டும். அப்போதுதான் அவர்களது சமூகப் பார்வை வெளிப்படும். இதன் அடிப்படையில் இன்றைய காலத்தில் பல்வேறு வடிவங்களில் சுற்றுலாத்துறை வளர்ந்திருந்தாலும் அதன் ஆரம்ப கூறுகளை தலயாத்திரைகள் என அடையாளப்படுத்தலாம். இவ்வாறான யாத்திரைகள் சமூக மறுமலர்ச்சிக்கு அடிப்படையாகவும் விளங்கும் சூழலில் இதன் சமூகமுக்கியத்துவத்தை நோக்குவது அவசியமாகும். இதனடிப்படையில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.



KALANJIYAM

## இலக்கிய மீளாய்வு

சம்பந்தர் பற்றிப் பல சிறந்த ஆய்வுகள் வெளிவந்துள்ளன. இதனடிப்படையில் சம்பந்தர் பற்றிய இந்த ஆய்வின் முன்னோடி ஆய்வுகளாக பின்வருவனவற்றை இனங்காண முடிகிறது.

அ.ச ஞானசம்பந்தன் எழுதிய 'பெரியபுராணம் ஓர் ஆய்வு' எனும் நூலானது சைவ நாயன்மார்கள் பற்றிய ஆய்வுப்புலத்தில் ஒரு மைல்கல் ஆகும். இந்நூலில் திருஞான சம்பந்தரின் பக்தியியக்கச் செயற்பாடுகள் விபரிக்கப்பட்டுள்ளன. சைவ பக்தித் தளத்தில் அவரது செயல்பாடுகள் அணுகப்பட்டன. தலயாத்திரைகளை மையப்படுத்துவதனை நோக்க மாகக் கொண்ட அவரது செயல்பாடுகள் அணுகப்படவில்லை. இருப்பினும் அ.ச.ஞானசம்பந்தனின் இந்த ஆய்வு இச்செயல் முறையின் கூறுகளை வெளிப்படுத்துகின்றது.

சு.வேங்கட்ராமனின் இந்திய இலக்கியச் சிற்பிகள் திருஞான சம்பந்தர் என்ற நூலில் சம்பந்தரின் சமயப்பணிகள் விளக்கப்பட்டுள்ளன. சம்பந்தர் மேற்கொண்ட யாத்திரைகள் பற்றிய குறிப்புகளை இந்நூலில் ஆங்காங்கே காணலாம். இந்த நூலானது, இந்த ஆராய்ச்சியை வளர்ப்பதற்கான ஆரம்பக் கருத்துக்களை வழங்குகிறது. வை. இரத்தின சபாபதியின் திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு - முதற்தொகுதி, இரண்டாம் தொகுதி எனும் இந்நூல்கள் இலக்கிய நோக்கில் சம்பந்தரின் தேவாரங் களை ஆராய்கிறது. சொ. சிங்காரவேலனின் திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும் என்ற நூல் சம்பந்தர் காலத்தையும் அவரது படைப்புக்களான தேவாரங்களையும் திறனாய்வு செய்கின்றது. பி.எஸ் சோமசுந்தரத்தின் சம்பந்தர் காட்டும் திருத்தலக் காட்சிகள் என்ற நூலில் சம்பந்தர் தேவாரங்களினூடு புலப்படுகின்ற திருத்தலக்காட்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு திருஞானசம்பந்தர் பற்றிய ஆராய்ச்சிகள் பல்வேறு வடிவங்களாக வளர்ச்சியடைந்துள்ள நிலையில் அவர் மேற்கொண்ட தலயாத்தரைகள் பற்றிய குறிப்புகளும் அவற்றிடையே குறிப்பிடப் பட்டுள்ளன.

தவிர சைவசமயத்தின் மீதான அவரது தலயாத்திரையின் தாக்கம் அல்லது அதன் சமூக முக்கியத்தவம் பற்றிய விரிவான ஆய்வுகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. இத்தன்மை இந்த ஆய்வின் இடைவெளியாக இனங்காணப்பட்டதன் அடிப்படையில் இந்த ஆய்வு நிகழ்த்தப்படுகிறது.

Kalanjiyam - International Journal of Tamil Studies
Volume: 5 Special Issue December 2024 eISSN: 2456-5148

**ஆன்மிகப் பயணம் - தலயாத்திரை**

யாத்திரை என்பது இந்துக்களின் வழிபாட்டு முறையில் மற்றுமொரு வடிவம், தலங்களை நோக்கிய புனிதப் பயணங்களாகும் (வில்கின்ஸ்.ஜே, டபிள்யூ., தமிழில்,ச.சரவணன், 2009:88). சமயச் சான்றோரின் யாத்திரைகள் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையே அமைந்துள்ள திருத்தலங்களை நோக்கியாதாக அமைந்திருந்தன. தலங்களுக்கான புனிதப் பயணங்கள் தலயாத்திரைகளாகப் பரிண மித்தன.

தலயாத்திரை எனும் சொல் தலம், யாத்திரை என்ற இரு சொற்களின் கலவையாகும். தலம் என்பது எல்லாப் பொருட்களின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் மூலகாரணனாகிய மேலான பொருளான இறைவன் எழுந்தருளியுள்ள இடங்களைக் (ஸ்தலம்) குறிக்கும். யாத்திரை என்ற சொல் “யா ”

என்ற எழுத்தில் இருந்து வந்தது. போவது, பிரயாணம் செய்தல், தெய்வத்தையோ, புண்ணியத்தையோ நாடி கோயிலுக்கோ மற்ற தலம், தீர்த்தம் முதலியவற்றுக்கோ தனியாகவோ, குழுக்களாகவோ மக்கள் செல்வது என்பது இச்சொல்லுக்கான பொருளாகும். தலயாத்திரை, தீர்த்தயாத்திரை, பாதயாத்திரை, இரதயாத்திரை என்று பல நிலைகளில் யாத்திரைகள் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

ஆன்மீக வாழ்க்கையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் திருக்கோயில்களை இலக்காகக் கொண்டு தங்கள் பயணங்களை மேற்கொண்டனர். தொலைதூரக் கோயில்களுக்கு நீண்ட பயணமாகச் சென்று அங்குள்ள தெய்வ விக்கிரகங்கள், தலவிருட்சம், தீர்த்தங்களை வணங்கி, காணிக்கை செலுத்தி விட்டு கோயிலைச் சுற்றி வருவதும் உளம் மகிழ்ந்த அனுபவமாகும். இச்செயற்பாடுகள் ஆன்மிக வாழ்வில் ஊறிப்போனவர்களின் சிறந்த பணியாகவும் ஆகிவிட்டன.

தலயாத்திரை என்பது மனிதர்;களின் ஆன்மிகப் பயணம் ஆகும். இந்த யாத்திரைகளைப் பொறுத்தவரை, அதை மேற்கொள்பவரின் நம்பிக்கை, இலக்கை அடையும் போது அவர்கள் பெறும் மகிழ்ச்சி, குழுமனப்பான்மை, மன அடக்கம், புலனொடுக்கம், ஒருமித்த முடிவு, ஒருங்கிணைந்த செயல், வழியில் ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளும் தன்மை, தலங்களைப் பார்த்தவுடன் அவர்கள் பெறும் மனநிறைவு மற்றும் அவர்கள் அனுபவிக்கும் உடலியல் நலன்கள் ஆகியவை மிகவும் சிறப்பு வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.

பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து நவீன போக்குவரத்துச் சாதனங்களின் வருகை வரை மக்களின் நடமாட்டம் மற்றும் தொலைதூரப் பகுதிகளுக்கு இடையேயான போக்குவரத்து ஏற்படுவதற் குத் தலயாத்திரைகள்

பெரிதும் காரணமாயிருந்தன. இவை திருவிழாக்கள் மற்றும் விசேட நாட்காலங்களில் மக்கள் பெருமளவில் திருக்கோயில்களுக்குச் செல்லும் வழக்கத்தையும் மேம்படுத்தின.

சைவபக்தி இயக்கத்தின் கர்த்தாவான காரைக்காலம்மையார் திருத்தல யாத்திரைகளின் முன்னோடியாவார். எனினும் சைவத்தின் பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய திருஞான சம்பந்தரும் நாவுக்கரசரும் அதை அதிகளவில் முன்னெடுத்தவர்களாவர். இருவருமே பல்வேறு திருக்கோயில்களுக்குப் பயணம் செய்திருந்தாலும், சைவப்பண்பாட்டைப் பரப்புவதில் முக்கிய உத்தியாகவும் முறையான திட்டமிடலாகவும் அதனைச் செய்தவர்; சம்பந்தரே. அவருடைய தலயாத்திரைகள் அன்றைய சமூகத்தில் பாரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

**சம்பந்தர் காலப்பின்னணி** ‘

அந்த இருண்ட காலகட்டத்தில், தமிழகத்தில் பெரும் அரசியல், சமய, மொழி மாற்றங்கள் ஏற்பட்டு, தமிழர்களின் வாழ்க்கையையும், நாகரிகத்தையும் பல புதிய திருப்பங்களுக்கு உட்படுத்தியது’ என்கிறார் கே.கே.பிள்ளை. இக்கருத்து பல்லவர் காலத்துக்கு முற்பட்ட காலத்தைத் தெளிவுபடுத்துவதாகும். தமிழக வரலாற்றில் கி.பி 2ம் நூற்றாண்டு முதல் கி.பி 7ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை சமண, பௌத்த சமயங்களின் ஆதிக்கம் காணப்பட்டது.

களப்பிரர் ஆட்சிக் காலத்திலும், 6ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பல்லவர் மற்றும் முற்காலப் பாண்டியர் ஆட்சிக் காலத்திலும் சமணம் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. அதனால் பெரும்பாலான மக்கள் அதே பாதையைப் பின்பற்றினர். அந்தச் சமயங்கள் பாலி மற்றும் பிராகிருத மொழிகளில் அந்தந்த சமய தத்துவங்களை விளக்கின. உயிர்க் கொலைகளையும், வேள்விகளையும் எதிர்த்தன. உயிரிரக்கம், நல்லொழுக்கம்; மற்றும் மனித நேயத்தை வலியுறுத்தின. அதே நேரத்தில் கடுமையான துறவு, உண்ணா விரதம், நுண் கலைகளுக்கு எதிர்ப்பு மற்றும் பெண்களுக்கு முதன்மையின்மை ஆகியவை வலியுறுத்தப்பட்டன (வேங்கட்ராமன்.சு.,2007:11).

இத்தகைய காலச் சூழலில் புறச்சமயங்களுக்கு மாற்றாக சைவசமயத்தினை வளர்க்க வேண்டிய தேவையும் அவசியமும் பக்தியியக்கச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் எழுந்திருந்தது. அச்சமயங்கள் வலியுறுத்திய கொள்கைகளுக்கு மாற்றாக, இல்லறத்தைப் பேணுதல், அனைத்து நுண்கலைகளும் தெய்வீகப்பிரியமானவை என்பதை தெளிவுறுத்தி, தெய்வீகவுணர்வை ஊட்;டி அவை வீடுபேற்றிற்குத் துணையாகும் என்பதனை வலியுறுத்துதல், தமிழை வளமாக்கி அதன் மூலம் பக்தி, சமயம், மற்றும்

தத்துவம் ஆகியவற்றை விளக்கி மக்களை ஒன்றிணைந்து செயல்பட வைத்தல் என்பன பக்தி இயக்கத்தின் இன்றியமையாத கடமையாகும். பக்தி இயக்கத்தை முன்னின்று நடத்தி மேற்கூறிய மாற்றத்திற்கு வித்திட்டார் என்று சைவ உலகில் சம்பந்தர் போற்றப்படுகிறார்.

திருஞானசம்பந்தர் காலம் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. சம்பந்தர் காலத்தைப் பற்றி ஔவை துரைசாமிப்பிள்ளை நன்கு ஆராய்ந்து கருத்தினை வழங்கியுள்ளார் (துரைசாமிப்பிள்ளை, ஔவை.சு.,2011:64-65). திரு. சைமன் காசிச் செட்டியாரவர்கள், சோழ பூருவபட்டயத்திற் கண்டவாறு ஞானசம்பந்தர், நாவரசர், நம்பியாரூரராகிய மூவரது காலமும் ஒன்றேயென்றும், அது ஐந்தாம் நூற்றாண்டென்றும் கூறுவர்.திரு.சி.வை. தாமோதரம்பிள்ளை யவர்கள், கூன்பாண்டியன் காலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் என்கிறார்;. எனவே அவர் கருத்துப்படி ஞானசம்பந்தர் காலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. கொழும்பு திரு. p.குமார சுவாமிப் பிள்ளையவர்கள், விடந்தீண்டியிறந்த வணிகளை ஞானசம்பந்தர் மீட்டெடுத்த கதையைக் கூறும் திருவிளையாடலின் கூற்று, சிலப்பதிகாரத்தில் காணப்பட, சிலப்பதிகாரம் கி.பி. 113 – 135 வரையிறுந்த கயவாகுவின் காலமாதல் கொண்டு ஞானசம்பந்தர் அதற்குச் சில ஆண்டுகள் முன்பு கிறித்து பிறந்த காலத்தவராக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். கரிகாலன் காலத்திலும் கோச்செங்கணான் காலத்திலும் பல தமிழ்ப் பாடல்கள் இயற்றப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிந்திருப்பதால், தேவார ஆசிரியர்களை அவ்விரு வேந்தர்களின் காலத்தைச் சேர்ந்தவராகக் கருதுவதில் எந்தத் தடையுமில்லை என்றார் அறிஞர் ஹ{ல்ஸ். மனோன்மணியம் p. சுந்தரம்பிள்ளையவர்கள் ஞானசம்பந்தர் காலத்தை முதன்முதலாக, அக்காலத்தே தமக்குக் கிடைத்த கருவிகளைக் கொண்டு நேரியமுறையில் ஆராய்ந்து, சங்கரர், தாம் எழுதிய சௌந்தர்யலகரி என்ற நூலில் ஞானசம்பந்தரைக் குறித்துப் பாடியிருப்பதால், ஞானசம்பந்தர் சங்கரர்க்கு முற்பட்டவர் என்று நிறுவி, முடிவில் ஞானசம்பந்தர் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவரெனத் துணிந்தார். இக்கருத்துக்களினடிப்படையில் சம்பந்தரின் காலம் கி.பி 7ம் நூற்றாண்டு எனக் கொள்ள முடிகிறது.

சைவ மரபில் சம்பந்தரின் பாடல்கள் தேவாரங்கள் என வழங்கப்படுகின்றன. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்றில் இடம்பெற்றுள்ளவை இவரது படைப்புகளாகும். இதில் மொத்தம் 384 பதிகங்கள் உள்ளன. அவற்றுள் திருத்தலப் பதிகங்களின் எண்ணிக்கை 377. பொதுத் திருப்பதிகங்கள் 7 ஆகும். இவர் 220 சிவத்தலங்களைப் போற்றிப் பாடியுள்ளார் (இரத்தினசபாபதி, வை.,1982:ஒ).

சம்பந்தரின் பதிகங்கள் ஊரக வரலாற்றையும், மக்களின் வழக்கங்களையும் பதிவு செய்துள்ளன. திருஞான சம்பந்தர் ஒரு தலத்தைக் குறிப்பிடும் போது, மக்களின் வாழ்க்கை முறை, பொருளியல் செயல்பாடுகள், மக்கள் வழக்கங்கள், இயற்கையின் சிறப்புக்கள், கடவுளரின் தெய்விக சிறப்புகள், அருளாற்றல், வழிபாட்டு முறைகள் மற்றும் திருக் கோயில்களின் தனித்துவமான சிறப்புக்களை உள்ளடக்கிப் பாடியுள்ளார். இவ்வாறாக, அவர் அவற்றைப் பாடிய முறைமைக்கும், இயற்கைக் குணங்களை வெளிப்படுத்த அவர் கையாண்ட உத்தி முறைகளுக்கும், அவற்றைப் பாடிய சந்தர்ப்பங்களுக்கும் அவருக்கு அடிப்படையாக அமைந்தவை அவர் மேற்கொண்ட தல யாத்திரைகளே.

**சம்பந்தரின் தலயாத்திரை முறை**

திருஞான சம்பந்தரின் தலயாத்திரையானது பதின்மூன்று ஆண்டுகளாக இடம்பெற்றிருந் தது. அவர் சைவசமய மறுமலர்ச்சிக்காக யாத்திரை செய்ய ஆரம்பித்த காலச் சூழலானது, அரச ஆதரவுடன் சமண சமயம் மேலெழுச்சி பெற்றிருந்த காலமாகும். பல்லவ மன்னர்களும் பெரும்பாலான மக்களும் சமண நெறியினைப் பின்பற்றியொழுகினர். இவ்வாறான புறச் சமயச் சூழலில் அதுவும் பால்ய வயதிலேயே மிக்க ஆளுமையுடைய ஒருவராக சம்பந்தர் தனது பக்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முயன்றிருக்கின்றார். வயது மட்டும் ஒருவருடைய ஆளுமையைத் தீர்மானிப்பதில்லை. மனப் பக்குவமும், இறைபற்றும், உறுதியான நம்பிக்கையும், திட்டப் பாங்கான செயற்பாடுகளுமே ஆளுமையின் ஊற்றிடங்களாக உள்ளன என்பதனை சம்பந்தரின் வாழ்வியலை அறிந்து கொள்பவர்கள் யாவரும் தெளிவாக விளங்கிக் கொள்வர்.

மூன்றாவது வயதில் தொடங்கிய அவரது தலயாத்திரைகள் பதினாறு வயதுவரை தொடர்ந்திருந்தது. நான்கு யாத்திரைகள் ஏழு வயதுக்குள் இடம் பெற்றிருந்தன. ஐந்தாவது தல யாத்திரை மிகவும் விசாலமானதாகச் சிறப்புப் பெற்றிருந்தது. இக்கட்ட யாத்திரிரையின் போது பல்வேறு பிரதேசத்துத் தலங்களைச் சென்று வழிபட்டு, அதிகளவில் பதிகங்களைப் பாடியுள்ளார். இக்காலத்தில் 218 பதிகங்களைப் பாடியதாக அறிய முடிகிறது. சைவ சமய வரலாற்றுப் போக்கில் பல மாற்றங்களை ஏற்படுத்திய ஒரு பயணமாகவும் இக்காலகட்ட யாத்திரை அமைந்திருந் தது. ஆறாவது யாத்திரையை தனது பதின்நான்காவது வயதிலேயே ஆரம்பித்திருக்கிறாரெனில் ஐந்தாம் கட்ட யாத்திரையானது ஏழு ஆண்டுகளாக நீட்சி பெற்றிருந்ததெனக் கொள்ள முடிகிறது.

மிக இளம்பராயத்தில் தந்தையின் தோளிலும், பின்னர் பல்லக்கிலும் தலங்களுக்குச் சென்றுள்ளார். கோயில் தென்பட்டதும் நடந்து சென்று திருக்கோவிலை வலம் வந்து உள்ளே சென்று வழிபட்டுப் பதிகம் பாடியுள்ளார்.

நான்காம் கட்ட யாத்திரையோடு தந்தையார் சீர்காழியில் இருக்க அடியவர் கூட்டத்தோடு தல யாத்திரையை மேற்கொண்டிருந்தார். தீருநீலகண்ட யாழ்ப்பாணர், மதங்க சூளாமணி, திருநாவுக்கரசு நாயனார், முருகநாயனார், சிறுத்தொண்டர் முதலிய நாயன்மார்களுடன் சேர்;ந்தும் அவரது பயணங்கள் இடம் பெற்றிருந்தன. திருநாவுக்கரசருடன் இணைந்து சம்பந்தர் மேற்கொண்ட திருத்தலங்களை நோக்கிய பயணங்கள் வரலாற்று முக்கியத்துவமுடையனவாகக் காணப்படுகின்றன.

இந்தவகையில், அரச ஆதரவு மிகுந்த சமண சமயச் சூழலிலேயே சம்பந்தரின் தலயாத்திரைகள் நிகழ்;ந்திருந்தன. போக்குவரத்து வசதிகள், ஒழுங்கான வீதிப் புனரமைப்புகள், போதியளவு தங்குமிட வசதிகள், அன்ன சத்திரங்கள், தாகசாந்தி இடங்கள் என நவீன வசதிகள் இல்லாத அன்றைய காலச் சூழலில் மக்களினுடைய ஆதரவினை மட்டும் நம்பியே இவர் இந்தத் தல யாத்திரிரைகளை முன்னெடுத்திருந்தார்.

**சம்பந்தரும் தலயாத்திரைகளும்**

சம்பந்தர் தம் காலத்தில் சைவ பக்தி இயக்கத்தை முதன்மைப்படுத்தி, மக்கள் சக்தியைக் கட்டியெழுப்பவும்இ பிறசமயக் கருத்துக்களை நிராகரிக்கவும்இ மக்களிடையே தனது சொந்த சமயக் கருத்துக்களைப் பரப்பவும் புனித தலங்களுக்கு யாத்திரைகளை மேற்கொண்டார். இத்தகைய பயணங்கள் சைவசமயத்தை மேம்படுத்துவதற்கான அணுகு முறையாகவும், பிரசார உத்தியாகவும் அமைந்தன.

திருஞான சம்பந்தர் பிரமபுரத்து ஏரிக்கரையில் இறைவனின் திருவருளால் ஆட்கொள்ளப் பட்டதிலிருந்து தலயாத்திரை செய்து இறைவனைப் போற்றிப் பாடினார். அவரது செயல்களுக்கு சமூகமோ அவருடைய பெற்றோரோ காரணர்களாக இருந்திருக்கவில்லை. இதனை யாரும் செய்யத் தூண்டியவர்களுமல்லர். அப்படியானால், அவருக்கு எங்கிருந்து அத்தகைய ஞானம் கிடைத்தது? ஞானம் இரண்டு வகைப்படும். ஒன்று இறையருளால் வருகிறது. மற்றொன்று நாமே முயற்சி செய்து பெறுவது. இங்கு சம்பந்தருக்கு முதல் நிலை ஞானமே கிடைத்தது. ஞான வடிவான அன்னையின் பால் அருந்தியதன் காரணமாக இந்த ஞானம் கிடைத்தது. இதற்கு இறைவனின் கட்டளை இருந்தது. இறைவனின் அருளினாலேயே இச்செயல்கள் நடந்தன என்று சம்பந்தரே குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வாறு ஞானப்பால் உண்டதைத் தொடர்ந்து தலங்களுக்குச் சென்ற யாத்திரைகள் அவரது இறுதிக் காலம் வரை அவரால் மேற்கொள்ளப்பட்டன.

ஒவ்வொரு செயலுக்கும் பல நோக்கங்கள் உள்ளன. சமயப் பின்னணியில் பெரியவர்கள் மேற்கொள்ளும் யாத்திரைகளும் நோக்கம் நிறைந்தவை.

சம்பந்தரும் தனது பணியை நிறைவு செய்வதற்கு ஒரு முறையான பிரசார முறையாக தல யாத்திரைகளை மேற்கொண்டார். இத்தகைய பயணங்களை அறிவார்ந்த முறையில் செயற்படுத்தியதன் விளைவாக, அவர் தனது சைவக் கொள்கைகளை சமூகத்தவரிடையே பல நிலைகளில் பரப்ப முடிந்தது.

சைவசமயக் கொள்கைகளைக் கற்கும் வடமொழிப் புலமை, அவற்றைச் சமூகத்தில் பேசுவதற்கு தமிழறிவு, இசைப் புலமைத்துவம் எனப் பலதரப்பட்ட ஆளுமைகளைக் கொண்ட சம்பந்தர், அவற்றை வெளிப்படுத்தும் மையங்களாக கோயில்களைக் கொண்டிருந்தார். சமூகப் பண்பாட்டின் இருப்பு அது வாழும் சமூகத்தைப் பொறுத்தே அமைகின்றது. ஒரு சமூக நிறுவனமாக அதேவேளை சமய இயங்கியலின் அடித்தளங்களாக திருக்கோயில்கள் இருந்தன. இதனை உணர்ந்து கொண்டே சம்பந்தர் தலயாத்திரைகளை மேற்கொண்டிருந்தார்.

சம்பந்தர் பதின்மூன்று வருடங்களாக சைவ சமயத்தை வளர்க்க யாத்திரைகளை மேற்கொண்டார். இந்தவகையில் அவரது தலப்பயணங்களை ஆறு கட்டங்களாகப் பிரிக்கலாம்.
முதலாவது தலயாத்திரை – சீர்காழியில் இருந்து தொடங்கி திருக்கோலக்கா சென்று மீண்டும் சீர்காழிக்குத் திரும்பினார். இதுவே அவரது முதற்கட்ட யாத்திரையாகும்.

இரண்டாவது தலயாத்திரை – சீர்காழியிலிருந்து தொடங்கி, நனிபள்ளி, தலைச்சங்காடு, வலம்புரம், காவிரிப்பூம் பட்டினம், சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில், சிரபுரம் முதலிய தலங்களைச் செல்வது அவரது இரண்டாம் கட்ட யாத்திரையாக இருந்தது (சம்பந்தர் தேவாரம்:1:23.1). தலயாத்திரைகள் ஒவ்வொன்றும் சைவப் பண்பாட்டில் பல மாற்றங்களை ஏற்படுத்தினாலும் இரண்டாம் கட்ட யாத்திரை பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியதைக் காணலாம். திருநனிபள்ளி மற்றும் திருவெண்காடு யாத்திரைகள் சம்பந்தருக்கு பிற்காலத்தில் சிறப்பளிக்கும் பயணங்களாக அமைந்தன.

மூன்றாம் தலயாத்திரை – சம்பந்தரின் மூன்றாம் கட்ட யாத்திரையும் சீர்காழியில் இருந்து தொடங்கியது. திருக்குருகாவூர், மயேந்திரபள்ளி, திருவெள்ளடை, திருக்கலிக்காமூர் ஆகிய திருத்தலங்களைத் தரிசித்து, இறைவனை வணங்கி பதிகங்களைப் பாடி மீண்டும் சீர்காழி வந்து தங்கினார். இக்காலத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர் மனைவி மதங்கசூளாமணி அம்மையாரும் சம்பந்தரை வணங்குவதற்கு சீர்காழி வந்தனர் (சிங்காரவேலன்,சொ.,1969:7).

நான்காவது தலயாத்திரை – சீர்காழியிலிருந்து திருத்தில்லை வரை அவரது நான்காவது கட்ட தலயாத்திரை அமைந்தது. இந்த யாத்திரையில் சம்பந்தருடன் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் சென்றிருந்தார். தில்லைக்கூத்தனின் பாதம்



KALANJIYAM

பணிந்து வணங்கிவிட்டு, தன் அடியாருடன் பல இடங்களுக்குப் பயணம் செய்தார். திருவேட்களம், திருக்கழிப் பாலை, திருநெல்வாயில் அரத்துறை, திருவெருக்கத்தம்புலியூர், திருமுதுகுன்றம், பழுவூர், திருப்பெண்ணாகடம், விசயமங்கை, திருவெஃகா, திருப்புறம் பியம், சேய்ஞலூர், வாழ்கொளி, புத்தூர், திருக்கடம்பூர், திருநாரையூர், திருக்கறிப்பறியலூர் முதலான தலங்களைத் தரிசித்து, பதிகங்கள் பாடியபின் சீர்காழி திரும்பினார் (சிங்காரவேலன்,சொ.,1969:8).

ஐந்தாவது தலயாத்திரை – சம்பந்தரின் ஐந்தாவது தல யாத்திரையும் சீர்காழியிலிருந்து ஆரம்பமானது. இந்த யாத்திரையின் போது, சோழ நாடு, கொங்கு நாடு, பாண்டியநாடு எனப்பல இடங்களுக்குச் சென்று பதிகங்களைப் பாடினார். திருக்கண்ணார், புள்ளிருக்கு வேளீர், திருப்பாச்சிலாச்சிரமம், திருச்செங்காடு (கொடிமாடச்செங்குன்றூர்) திருநின்றியூர், திருநீடூர், திருப்புன்கூர், திருப்பழ மண்ணிக்கரை, திருமணஞ்சேரி, திருவெதிர் கொள்பாடி, திருவேள்விக்குடி, திருத்துருத்தி, திருக்கோடிகா, திருக்கஞ்சனூர், திருமாந்துறை, திருமங்கலக்குடி, திருவியலூர், திருந்து தேவன் குடி, திருவின்னம்பர், வடகுரங்காடு துறை, திருப்பழனம், திருவையாறு, திருப்பெரும்புலியூர், திருநெய்த்தானம், திருமழபாடி, திருக்கானூர், திருவன்பிலாந்துறை, திருவட மாந்துறை, திருச்சிராப்பள்ளி, திருவலஞ்சுளி, பழையாறை, திருச்சக்தி முற்றம், பட்டீச்சுரம், திருவாவடுதுறை, திருத்தருமபுரம், திருச்செங்காட்டங்குடி, திருமருகல், திருப்புகலூர், திருவாரூர், திருக்கடவூர், திருஆக்கூர், திருவீழிமிழலை, திருமறைக்காடு (வேதாரண்யம்) திருவாய்மூர், திருக்குற்றாலம், திருநெல்வேலி, இராமேசுவரம், திருத்தெளிச் சேரி, திருக்கடவூர் மற்றும் திருப்பூந்துருத்தி வரை நீடித்திருந்தது (சிங்கார வேலன்,சொ.,1969:11). இதன்படி அவர் பல இடங்களில் நீண்ட நாட்கள் தங்கியிருந்ததாகத் தெரிகின்றது.

இராமேஸ்வரத்தில் நின்று இலங்கையின் கிழக்கு மேற்காக உள்ள திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய புராதனமான சிவாலயங்களை வணங்கிப் பதிகம் பாடினார். மேற்குறிப்பிட்ட சிவத்;தலங்கள் இலங்கையிலுள்ள பெரும்பான்மையான இந்துக்களால் வழிபடும் தலங்களாகவும், புனிதப் பயணங்களை மேற்கொள்வதற்குரிய இடங்களாகவும், வரலாற்றுத் தொன்மையுடைய தலங்களாகவும் விளங்குகின்றன.

ஆறாவது தலயாத்திரை – சம்பந்தர் பதின்நான்கு வயதில் ஆறாவது தலயாத்திரையைத் தொடங்கினார். திருவோத்தூர், திருமாகறல், திருக்குரங்கணின் முட்டம், காஞ்சிபுரம், திருக்காளத்தி, திருவேற்காடு, ஒன்றியூர், மயிலாப்பூர், திருவான்மியூர், திருக்கழுக் குன்றம், திருமேற்றளி, திருக்கச்சி, நெறிக்கரைக்காடு, திருவாலங்காடு, திருப்பாசூர், திருவெண் பாக்கம், திருக்காரிகரை என்ற தலங்களை நோக்கியதாக அமைந்தது. இதுவே

அவரது இறுதி யாத்திரையாகும். பதினாறாம் வயதில் திருமண மும், சோதியில் கலத்தலுமாகிய நிகழ்வு வரை அவரது யாத்திரைப் பணியும் இடம்பெற்றது.

**சைவப்பண்பாட்டு மறுமலர்ச்சியில் சம்பந்தரது தலயாத்திரையின் தாக்கம்**

சம்பந்தர் மேற்கொண்ட தலயாத்திரைகள் ஏலவே கூறியது போன்று ஆறு கட்டங்களாகவும், அவர் பிறந்த இடமான சீர்காழியை மையமாகவும் கொண்டிருந்தது. அவர் செல்லும் ஒவ்வொரு யாத்திரைகளும் பல்வேறு வடிவங்களில் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டிருந்தன. இத்தகைய மாற்றங்கள் சைவப்பண்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தியது மட்டுமன்றி பிற்காலத்தில் தலயாத்திரையின் அவசியத்தையும் ஏற்படுத்தியது.

இவ்வுலகியலில் பிறப்பெடுத்து நல்வினையாற்றி வீடுபேறு பெற வேண்டிய தேவை இல்லாத ஜீவன் முத்தர் தாமென்பதனை சம்பந்தரே குறிப்பிட்டிருக்கின்றார். இத்தகைய ஒருவர் இம்மண்ணின் மேல் பிறப்பிக்கப்பட்டதற்குக் காரணம் யாது? ஊர்ஊராகச் சென்று இறைவனை ஏன் வணங்க வேண்டும்? அவ்வூரில் உறையும் இறைவனை ஏன் காணவேண்டும்? என்ற சிந்தனையில் இறங்கிய சேக்கிழாருக்கு அந்த உண்மை புலப்படலாயிற்று. சம்பந்தர் ஊர்கள் தோறும் செல்வதற்குக் காரணம் யாதெனில் பல்வேறிடங்களிலும் வாழும் மக்கள் இவரை நாடிச் சீர்காழிக்கு வருதலென்பது இயலாத காரியம். எனவே சீர்காழித் தலைவர் மக்களை நாடி அவர்கள் இருக்குமிடம் தேடிச் சென்றார் என்ற உண்மை புலப்பட சேக்கிழார் தமக்கேயுரிய முறையில் விளக்கம் தருகிறார்.

மானுடவியல், வரலாறு, சமூகவியல், கலை, சமயம், தத்துவம், அறிவியல் மற்றும் நெறிமுறைகள் ஆகியவற்றில் ஆராய்ச்சியாளர் களுக்குப் பொருத்தமான தடயங்களை வழங்கும் ஆதாரங்களாக சம்பந்தரின் பாடல்கல் காணப்படுகின்றன. அவரது பயணங்களும் அங்கு அவர் பெற்ற அனுபவங்களும் அத்தகைய கூறுகளைத் அவரது பதிகங்களில் பதிவுசெய்ய உதவியது.

சம்பந்தரின் ஆறுகட்ட யாத்திரை அக்கால சமய மற்றும் சமூக நிலைமைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது. முதலாவது திருத்தல யாத்திரையே சம்பந்தருக்கு சமூக அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. திருக்கோலக்காத் தலத்தில் கைகளால் தாள அமைத்துப் பதிகம் பாடினார். இதன் விளைவாக, இறைவன் அவருக்கு பொற்றாளம் வழங்கினார். இறைவி அதற்கு ஓசை (ஒலி)

கொடுத்தருளினார். யாத்திரையின் தொடக்கத்திலிருந்தே சம்பந்தருக்கு இறைவனின் கட்டளையும் ஆதரவும் இருந்தது.

அடுத்து, நனிபள்ளியூர் மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சம்பந்தர் தம் தந்தையின் தோளில் நனிபள்ளிக்குப் பயணமானார். அங்கே இறைவன் மீது திருப்பதிகம் பாடினார். பாடல்கள் முழுவதும் முதல் இரண்டு அடிகளில் பாலைநிலத்தின் தன்மையும், பின்னிரண்டு அடிகளில் மருதம் மற்றும் நெய்தல் நிலங்களின் தன்மையும்; விவரிக்கப்பட்டுள்ளன. (ஞானசம்பந்தன்.அ.ச.,1999:177). பாலை நிலமாக இருந்த திருநனிபள்ளி சம்பந்தரால் நெய்தல் நிலமாக மாறும்படி பாடியருளப் பெற்றது (சம்பந்தர்தேவாரம்:220:1-9). சம்பந்தர் தன் ஆளுமையால் பயனற்ற நிலத்தை மேம்படுத்தி பயனடையச் செய்திருக்க முடியும். அதாவது மக்களுக்குப் பயன்படாத இயற்கையை, இறைவன் அருளாலும் தன் முயற்சியினாலும் பயனுள்ள நிலமாக மாற்றினார் சம்பந்தர் என்றே இதனை உணர வேண்டும். தற்காலத்தில் முல்லை நிலங்களும், மருத நிலங்களும் குடியிருப்புப் பகுதிகளாகவும் நெய்தல் விவசாய நிலங்களாகவும் மாற்றப்பட்டு வருவது கவனிக்கத்தக்கது. இதற்கும் ஒருவரின் உத்தரவு தேவை. இது இன்றைய ஆட்சியாளர்களின் ஆணையாக மாறி வருகின்றது. சம்பந்தர், பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கப் பாடிய பதிகத்தின் 11ம் பாடலில், “நனிபள்ளி உள்க வினை கெடுதல் ஆணை நமதே” எனப் பாடியிருப்பது கவனிக்கற்பாலது.

திருவெண்காட்டுக் கோயில் சம்பந்தரின் இரண்டாவது யாத்திரையில் ஒன்றாகும். திருவெண்காடு பழைய சிவத்தலங்களில் ஒன்றாகும். சோமதீர்த்தம், அக்கினி தீர்த்தம், சூரிய தீர்த்தம் என்ற மூன்று தீர்த்தங்கள் உள்ளன. இம்மூன்றையும் ‘முக்குளம்’ என்றும் அங்குள்ள நீர் ‘முக்குளத்து நீர்’ என்றும் அழைக்கப்படுகின்றது. அவை மிகவும் புனிதமானவை. இத்தலத்தை அடைந்த சம்பந்தர் வழிபடுபவர்களின் செயல்கள், நிகழ்வுகள் மற்றும் அடியவர் கூறும் அனுபவ வார்த்தைகளால் கவரப்பட்டார். அந்தச் சூழலில் குழந்தையின்மையால் வருந்திய தம்பதியர், மனைவிக்கு நீண்ட நாட்களாகப் பேய் பிடித்ததாகக் கவலைப்பட்ட கணவன், பேயாடும் மகளிர், வறுமை நீங்கவில்லையே என்று கூறும் மக்கள் என்ற மனோநிலையில் வழிபாடாற்றக் கண்டார். ‘வெண் காட்டானென் றுள்ளாடி யுருகாதார் உணர்வுடைமை யுணரோமோ’, ‘திருவெண் காட்டானென் றோதியவர் யாது மொரு தீதிலரென் றுணருமினே’ (சம்பந்தர்தேவாரம்:184:9), ‘வெண்காடு மேவிய அண்ணலை அடிதொழ அல்லல் இல்லையே’ (சம்பந்தர்தேவாரம்:184:10), என்று இறைவனின் பெருமையை நினைந்தின்புற்றார். அங்கு தான் கண்டதையும், கேட்டதையும் அனுபவித்ததையும் பதிவுசெய்துள்ளார். முக்குள நீரின் மகத்துவத்தையும் அத்தலத்தின் வழிபாட்டு நலன்களையும் எடுத்துரைத்துள்ளார்.

இன்றைய மருத்துவ வல்லுநர்கள் மன அழுத்தம், அதிகரித்த வேலைப்பழு, அமைதியற்ற வாழ்வு, ஓய்வின்மை, உணவுப் பழக்கவழக்கம் ஆகியவற்றையே குழந்தையின்மைக்கான காரணங்களாகக் குறிப்பிடு கின்றனர். இதற்குத் தீர்வாக சுற்றுலாவையும் பரிந்துரைக்கின்றனர். இதனை சம்பந்தர் அன்றே உணர்த்தியிருப் பதனைக் காணலாம். மெய்கண்ட தேவர் பிறப்பினால் இதனை நிரூபிக்க முடியும்.

மெய்கண்டதேவர் திருவெண்காட்டுப் பெருமானின் திருநாமமான சுவேதனப் பெருமாள் என்ற இளமைப் பெயரையுடையவர். அச்சுதகளப்பாளர் இவரது தந்தை. இவரின் குலகுரு அருணந்தி சிவாச்சாரியார். குழந்தைப் பேறின்மை அச்சுதகளப்பாளருக்கு மனக்குறையாகவே இருந்தது. இதனைத் தன் குருவிடம் கூறினார். குரு, தனது பாராயணத்திலுள்ள தேவாரத்தை எடுத்துக் கயிறு சார்த்திப் பார்த்த போது 'பேயடையா பிரிவெய்தும்' (சம்பந்தர்தேவாரம்:273:6) என்ற பதிகம் கிடைக்கப் பெற்றது. அதில், "பிள்ளையினோடு உள்ள நினை வாயினவே வரம் பெறுவர்" என்ற வாசகத்தினைக் கண்ட அருணந்திசிவாச்சாரியார், இறைவனை நினைத்து வியந்து, திருவெண்காட்டிற்குச் சென்று முக்குளநீரில் நீராடி, சிறிது காலம் அங்கு தங்;கும்படி அச்சுதகளப்பாருக்கு அறிவுறுத்தினார். குருவின் ஆலோசனையின்படி அச்சுத களப்பாளர் ஆண் குழந்தையைப் பெற்றுக்கொண்டார். அக்குழந்தையே பின்னாட்களில் இந்திய தத்துவவியலாளர்கள் போற்றுகின்ற மெய்கண்டதேவரானார். சம்பந்தரின் தலயாத்திரையின் தாக்கங்களில் ஒன்றாகவே இந்நிகழ்வினைக் கொள்ளலாம்.

ஏழு ஆண்டுகள் நீடித்த அவரது ஐந்தாம் கட்ட யாத்திரை சைவச் சூழலிலே பெரும் மாற்றங்களை கொண்டு வந்தது. சமணர்களோடு வாதம் செய்தமை, புத்தரை வாதில் வென்றமை, திருநாவுக்கரசு நாயனாருடன் சேர்ந்து திருத்தலப் பயணங்களை முன்னெடுத்தமை, வாசிதீரக் காசு நல்கியமை, ஆலயச்சூழலை நோக்கி மக்களை அதிகளவில் ஈர்த்தமை, ஆலயச் சூழலை மையமாகக்கொண்டு அற்புதங்களை நிகழ்த்தியமை, மக்களுக்கு நம்பிக்கைத் தன்மையை ஊட்டியமை, திருமறைக்காடு ஆலயத்தின் திருக்கதவு அடைக்கப் பாடியமை, சமுதாயத்தில் உள்ள மக்களிடம் உணர்வு மேலிடப் பெற்றவராக அற்புதங்க;டாக சமுதாயத் தளத்தில் காணப்பட்ட குறைகளைப் போக்கியமை என அக்காலச் சைவச் சூழலில் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தார். இவ்வாறான செயற்பாடுகள் சம்பந்தருக்கு நல்ல பிம்பத்தை ஏற்படுத்தியது. சமூகத்தில் வலுவான அங்கீகாரத்தை வழங்கியது.

அப்பரது சொல்லையும் மீறி சம்பந்தரின் பாண்டியநாட்டு யாத்திரை அமைந்தது. இதன் காரணமாக அரசியல் மற்றும் சமயச்சூழலில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. பாண்டியன் சிவசமயத்தைக் கைவிட்டு சமணத்தைத் தழுவினான். மக்கள் பலரும் அவனைப் பின்பற்றிச் சென்றனர். சிவன்

கோயில்கள் பள்ளிகளாகவும், பாழிகளாகவும் மாற்றினர். இந்நிலையில், அரசமாதேவியாரின் அழைப்பின்படி, பாண்டியநாடு சென்று அரசனை மனம் திருத்தி சைவத்திற்கு ஆதரவாக செயல்பட வைத்தார். அத்துடன் சமணர்களுடன் வாதங்களைப் புரிந்து சைவத்தின் இருப்பினையும் மேம்படுத்தினார்.

தேவாரங்கள் ஒவ்வொரு ஊர்கள் மற்றும் வட்டாரத்தில் காணப்படும் தொன்மங்களையும் ஊரக வரலாற்றினையும் பதிவு செய்துள்ளன. திருஞானசம்பந்தர், தாம் சென்ற சிவத்தலங்களின் வரலாற்றுக் கதைகளைத் தம் பாடல்களில் பதிவுசெய்துள்ளார். இறைவனின் பெருமைகள், குணாதிசயங்கள்;, மூர்த்திபேதங்கள், இறைவனின் திருவருட்செயல்கள், திருக்கோயில் வர்ணனை, திருக்கோயில் சிறப்புகள், வழிபாடுகள், அவற்றின் பயன் என்பன பாடல்களின் உள்ளடக்கங் களாகும். இத்தகைய தொன்மங்களே பிற்காலத்தில் தலபுராணங்கள் உருவாகி; சமயம், தத்துவம்;, கலை, ஒழுக்கம் மற்றும் அறிவியல் ஆகிய பண்பாட்டு மரபுகளின் விளக்கத்திற்கு அடிப்படையாகச் செயல்பட்டன.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் கோயில்களை அடிப்படையாகக் கொண்ட பல சமூக மாற்றங்கள் தமிழகத்திலே நிகழ்ந்தன. அதாவது கோயில்கள் கட்டமைப்பில் மிகப் பெரியதாக மாறி நகரங்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. கோயில்களை மையமாகக் கொண்டு நகரங்கள் வளர்ச்சியடைவதற்கு தேவாரமுதலிகளே காரணர்களாக அமைந்தனர். சைவர்களின் சமய வாழ்வில் தலயாத்திரைகளும் முக்கிய இடத்தைப் பெறத் தொடங்கின. பின்னாட்களில் ஏற்பட்ட இத்தகைய மாற்றங்களுக்கு சம்பந்தரின் தலயாத்திரைகளும், அவரது பதிவுகளும் அடிப்படையாக அமைந்தன.

இந்துக்களால் உருவாக்கப்பட்ட சமய நிறுவனங்களில் கோயில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. திருஞானசம்பந்தர் பாடிய திருத்தலப் பதிகங்கள் 377 உள்ளன. பாடல் பெற்ற தலங்களாகையால் அவை சைவ மரபிலே மிகவும் சிறப்பு வாய்ந்த சிவாலயங்களாகக் கருதப்பட்டன. இத்தகைய சிறப்புடைய கோயில்;களானவை கலை வளர்க்கும் அரங்குகள், கலைஞர்களின் குடியிருப்புகள், பாடசாலைகள், மருத்துவ நிலையங்கள், நீதிமன்றங்கள், வங்கிகள், பக்தி மையங்கள் எனப் பன்முகமாக விளங்கி சைவப் பண்பாட்டு விரிவாக்கத்தில் பணியாற்றின.

சம்பந்தர் தனது பதிகங்களிலே இயற்கை வளங்களுக்கும், சுற்றுச் சூழலுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். இயற்கையின் அழகில் இறைவனைக் கண்டு அந்த அழகினையும் பாடுகின்றார். உதாரணமாக சோழ நாட்டில் கும்பகோணம் அருகேயுள்ள திருவைகாவூர் இயற்கைக் காட்சியை,

“தாழை இள நீர் முதலிய காய்கமுகின்
வீழ நீரை தாறு சிதறி
வழையுதிர் வீழ் கனிகள் ஊறிவயல்
சேறு செய்யும் வைகாவிலே” (சம்பந்தர்தேவாரம்:184:2)

என்று குறிப்பிட்டுள்ளமையை நோக்கலாம்..

சைவ நாயன்மார்கள் நால்வரில் இயற்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தவராக சம்பந்தர் முதன்மை பெறுகிறார். அவரது பல பதிகங்களில் இரண்டு அல்லது மூன்று அடிகள் இயற்கையைப் பாடுவதைக் காணலாம். சம்பந்தரின் இயற்கை ஈடுபாட்டுக்கு அவரது இளமைப் பருவத்தின் இயற்கையை இரசிக்கும் மனப்பாங்கே எனப் பலரும் பொதுவாக காரணம் கூறுவதுண்டு.

ஆனால் அதற்கும் மேலாக அவர் மக்களின் உள்ளங்களை நிறைவிப்பதற்கான ஒரு உளவியல் உத்தி முறையாக இந்த வர்ணனை முறைமையைக் கொண்டிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு (சுப்பிரமணியன்,நா.,2002:102). தாம் முதன் முதலில் ஆட்கொள்ளப்பட்ட சூழல் இயற்கை சூழ்ந்த திருத்தலமாகையால் அதனைத் தனது வாழ்நாளில் தொடர முற்பட்டிருக்கலாமெனவும் எண்ண இடமுண்டு. பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை மேற்கூறிய ஊகத்தின் வழி பின்வருமாறு விளக்கம் தந்துள்ளார்.

“தம் பிரதேசத்தைப் பற்றிப் பிறர் புகழத்தாம் கேட்டு மகிழ்தல் என்னும் மன நிலையையே பயன்படுத்தித் தம் காரியத்தைச் சாதிக்கச் சம்பந்தர் முயல்கிறார் போலத் தெரிகிறது. பிற்போக்கான பிரதேசங்களில் போக்குவரவு வசதிகள் குறைந்த பகுதிகளில் ஆங்காங்கு குடியிருக்கும் மக்களிடை யில் பிரதேச உணர்ச்சி மிகுந்து காணப்படும். சம்பந்தர் தமிழ் நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணஞ் செய்தவராதலால், இவ்வாறுள்ள பிரதேசங்கள் பலவற்றைக் கண்டிருப்பார். இவ்வாறான பிரதேசங்களைக் குறித்து, உள்ளது விரித்தும், இல்லது புணர்த்தியும் அப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களிடம் கூறினால் அவர்களால் அகம் மிக மகிழ்ந்து எப்பெரிய காரியத்தையும் செய்ய முனைந்து நிற்றலை இன்றுங் காணலாம். பிரதேச உணர்ச்சியைப் பயன்படுத்திச் சைவசமய மறுமலர்ச்சியில் மக்களை முன்னின்று உழைக்கச் செய்யும் சம்பந்தர் இந்த முறையைக் கையாண்டிருக்கிறார் போலத் தெரிகிறது.” (சுப்பிரமணியன்,நா.,2002:102). சம்பந்தருடைய தலயாத்திரையின் தலைமைத்துவ ஆளுமை என்ற அம்சத்தை கருத்தொன்றி நோக்கும் போது பேராசிரியரின் இந்த ஊகம் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

திருஞான சம்பந்தர் தலயாத்திரைகள் மூலமாக சிவத்தலங்கள் அனைத்தையும் கண்டு சிவானுபவம் பெற்ற நிலையில் அவற்றைத் தமது பதிகங்களில் வெளிப்படுத்தியுள்ளார். அவர் பாடியருளியனவாக இன்று



KALANJIYAM

நமக்குக் கிடைக்கும் திருப்பதிகங்களோடு தொடர்புடைய தலங்கள் அனைத்தையும் நாம், சோழ நாட்டில் காவிரிக்கு வட கரையிலுள்ள தலங்கள், காவிரிக்கு தென் கரையிலுள்ள தலங்கள், ஈழநாட்டுத் தலங்கள், பாண்டி நாட்டுத் தலங்கள், நடு நாட்டுத் தலங்கள், தொண்டை நாட்டுத் தலங்கள், துளுவ நாட்டுத் தலங்கள், வட நாட்டுத் தலங்கள் என வகைப்படுத்தி வரையறை செய்து நோக்க முடிகிறது (வேலுப்பிள்ளை,ஆ., 1985:108-109).

ஒரு தலத்தைப் பற்றிக் கூறும் போது அத்தலத்தின் இயல்பான வரலாறு, ஆலயச் சிறப்பு, தலம் தொடர்பான புராண நிகழ்ச்சிகள், அத்தலத்தில் இறைவன் ஏதோ ஒரு கோலம் தாங்கி அடியவரை ஆட்கொண்டருளிய நிகழ்ச்சி, காலத்தில் நிகழ்ந்த அற்புதச் செயல்கள், தீர்த்தச் சிறப்பு, தலவிருட்ச மகிமை, ஆலயத்தில் வழி வழியாக இடம் பெற்று வரும் சிறப்பு விழாக்கள், வழிபாடுகள் என இவையனைத்தையும் சம்பந்தர் பதிகங்களில் தெளிவாகக் காணமுடிகின்றன (சோமசுந்தரம், பி.எஸ்.,2006:14). இவ்வுத்திகளின் மூலம் ஒரு தலத்தின் மீது மக்களுக்கு அதீத ஈடுபாட்டினை சம்பந்தர் ஏற்படுத்தினார்.

**நிறைவுரை:**

திருஞானசம்பந்தருக்குப் பல திருத்தலத் தரிசனங்கள் உண்டு. அவ்வாறு நேரிடையாகக் கண்டு அனுபவத்தைப் பெற, தலயாத்திரைகள் அவருக்கு அடிப்படையாக அமைந்தன. தேவார காலத்திற்கு முன்பே தமிழகத்தில் கோயில்;கள் இருந்துள்ளன. அடியார்கள் அந்தந்த ஊர்களில் இருந்து கோயில்வழிபாடு செய்து வந்தனர். ஆரம்பத்திலிருந்தே தமிழர்களுக்கு கடவுளுணர்வும், அன்புணர்வும் இருந்து வருகின்றன. இவை தேவார காலத்தின் பின் அதிக முனைப்புடன் வளர்ந்தன. இதற்கு சம்பந்தர் உள்ளிட்ட தேவார முதலிகளின் ‘தல மைய’ ச் செயற்பாடுகள் உந்து சக்தியாக அமைந்தன. சம்பந்தரின் யாத்திரைகள் சீர்காழியை மையமாகக் கொண்டு, பல்வேறு இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டன. சம்பந்தரின் மூலோபாய அணுகுமுறையும், பிரசார உத்தியும் கோயில் வழிபாடுகளிலும் சமூக நிலைகளிலும் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்தது. அத்துடன் சமயமறுமலர்ச்சியிலும் தாக்கம் செலுத்தியது.

சுற்றுலாப் பயணங்களின் போது இயற்கையின் அற்புதங்களை இரசிக்கும் மனோநிலை நம்மில் பலருக்குண்டு. மலைகள், ஆறுகள், மலர்கள், அருவிகள், வான் தொடும் சிகரங்கள், விலங்கினங்கள், பட்சிகள், மரங்கள், புல்லினங்கள் என்றவாறாக இயற்கையிறந்த அதிசயங்களைக் கண்டு வியக்கின்றோம். சம்பந்தர் தனது பாடல்களில் இயற்கையின் இத்தகைய அம்சங்களை பொருத்தமாகக் கையாண்டுள்ளார். இத்தகைய வெளிபாடுகள் பிறர் ஒவ்வொரு இடத்திற்கும்; செல்ல தூண்டுகோலாக அமைகின்றன. பிற்கால

தலைமுறையினர் சுற்றுலா மையங்களாகத் திருக் கோயில்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் அவை முன்னோடிச் சிந்தனைகளாக அமைந்துள்ளன.

எனவே, தமிழர் மரபில், சங்க காலம் தொடங்கி சம்பந்தர் காலம் வரை இப்படி ஊர் ஊராகச் சென்று நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய நிகழ்ச்சி இல்லை எனக்கூறலாம். காரைக்காலம்மையார் ஓரளவு இந்தச் செயலை நிகழ்த்தினாராராயினும் சம்பந்தரைப் போன்று செயற்பட்டிருக்க வில்லை. தொலைநோக்குச் சிந்தனையுடன் இத்திட்டத்தினை முதன் முறையாக ஆரம்பித்தவர் சம்பந்தரே. இதற்குப் பின்பே சைவக் கோயில்கள் மக்களின் ஈர்ப்பு மையங்களாக மாறின. கோயில் வழிபாட்டு முறைமைகள் விரிவடைந்தன. இந்து நுண்கலைகள் கோயில்க;டாக வளம்பெற்றன. கோயில்களை அடிப்படையாகக் கொண்டு நகரங்கள் உருவாகின. குகைக்கோயில்கள், தேர்க்கோயில்கள், கற்றளிக் கோயில்கள் திருக் கோயிற் கட்டிட அமைப்புக்கள் பல பரிமாணங்களில் வளர்ந்துள்ளன. பிற்காலத்தில் தமிழகத்தில் கோயில்களை அடிப்படையாகக் கொண்டு பல சமூக மாற்றங்கள் ஏற்பட்டன. சைவர்களின் வாழ்வில் தலயாத்திரை களும் முக்கிய இடத்தைப் பெறத் தொடங்கின. மக்கள் சமய உணர்வையும், அறிவையும் பெறுவதற்கு கோயில்கள் ஆதாரமாக உள்ளன. இவ்வாறு பல்லவர் காலத்து புறச்சமயச் சூழலில் இருந்து சம்பந்தர் மேற்கொண்ட தலயாத்திரைகள் சைவப்பண்பாட்டின் மறுமலர்ச்சியிலும் சமூக மாற்றங்களிலும் தாக்கம் செலுத்தியதைக் காணலாம்.

*உசாத்துணைகள்*

*1. சோமசுந்தரம், பி.எஸ்., (2006), சம்பந்தர் காட்டும் திருத்தலக் காட்சிகள், சென்னை, எர்.கே.எம்.பப்ளிகேஷன்.*
*2. வேலுப்பிள்ளை.டாக்டர்.ஆ., (1985), தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், மூன்றாம் பதிப்பு, சென்னை, பாரிபுத்தகப் பண்ணை.*
*3. சுப்பிரமணியன்.நா., (2002), நால்வர் வாழ்வும் வாக்கும், சென்னை, கலைஞன் பதிப்பகம்.*
*4. ஞானசம்பந்தன்.அ.ச., (1999), பெரியபுராணம் ஓர் ஆய்வு, சென்னை, கங்கை புத்தக நிலையம்.*
*5. வில்கின்ஸ்.ஜே.டபிள்யூ., தமிழில் ச.சரவணன், (2009), நவீன இந்துத்துவம், சென்னை, சந்தியா பதிப்பகம்,*
*6. வேங்கடராமன்.சு.,(2007), இந்திய இலக்கியச் சிற்பிகள் திருஞானசம்பந்தர், சாகித்ய அகாதெமி,*
*7. இரத்தினசபாபதி.வை., (1982) திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு - முதற்தொகுதி, டாக்டர்.எஸ்., இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக்கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம்.*
*8. சமூக விஞ்ஞானம், (ஏப்ரல் - மே - ஜூன் 2012) காலாண்டு ஆய்விதழ், இதழ் - 35, சென்னை, ஜானி ஜான் கான் சாலை இராயப் பேட்டை.*
*9. சிங்காரவேலன், சொ., (1969) திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத்*



KALANJIYAM

*திறனாய்வும், சென்னை, கழக வெளியீடு.*
*10. துரைசாமிப்பிள்ளை, ஔவை.சு., (2011), சைவ இலக்கிய வரலாறு. சென்னை, பூம்புகார் பதிப்பகம்.*

***References:***

*1. Somasundaram, P.S., (2006), Sambandar's Views of the Temple, Chennai, R.K.M. Publication.*
*2. Velupillai.Dr.A., (1985), Time and Concept in Tamil Literature, Third Edition, Chennai, Pari Book Farm.*
*3. Subramanian.N., (2002), The Life and Voice of Four, Chennai, Kalaignan Publishing House.*
*4. Gnanasambandhan.A.S., (1999), A Study of the Great Purana, Chennai, Gangai Book Store.*
*5. Wilkins.J.W., S. Saravanan in Tamil, (2009), Modern Hinduism, Chennai, Sandhya Publishing House,*
*6. Venkatraman.S.,(2007), Indian Literary Sculptors Thirugnanasambandar, Sahitya Academy,*
*7. Ratnasabapathi.V., (1982) Thirugnanasambandar A Study - Volume One, Dr.S., Radhakrishnan Institute of Higher Education, University of Madras.*
*8. Social Sciences, (April - May - June 2012) Quarterly Review, Issue - 35, Chennai, Johnny John Khan Road, Royapettah.*
*9. Singaravelan, S., (1969) Thirugnanasambandar Historical Research and Thevaram Criticism, Chennai, Society Publication.*
*10. Duraisamy Pillai, Olavai.S., (2011), History of Saiva Literature. Chennai, Poompuhar Publishing House.*

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.